**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

**முன்னிலை:** M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS),
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01-ஆம் நாள் புதன்கிழமை

STC. No. 328 of 2025

CNR No. TNTV15-001350-2025

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
குடவாசல் காவல் நிலையம்,
குற்ற எண். 317/2021. --- குற்றமுறையிடுபவர்

- எதிர் -

திருமதி. மஞ்சுளா, வயது 52/2026,
க/பெ. காசிராமன்,
மெயின் ரோடு,
மேளாநான்சேரி. --- எதிரி

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Summary Trial Case (S.T.C) No.328 of 2025 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Sub-Inspector of Police, Kodavasal PS. in Cr.No.317/2021 |
| 3. | Name of the accused | K. Manjula |
| 4. | Father's Name | W/o. Kasiraman |
| 5. | Occupation | - |



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.01 10:33:06 +0530

<table>
<tr><td>6.</td><td>Residence</td><td colspan="3">Main Road,<br>Melanancherry</td></tr>
<tr><td>7.</td><td>Age</td><td colspan="3">52/2026</td></tr>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">30.03.2021</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">30.03.2021<br>30.03.2021</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">-</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">-</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s 207 Cr.P.C.</td><td colspan="3">06.01.2026</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 06.01.2026 the accused questioned on substance of accusation U/s. 4(1) TNOPPD Act.<br>Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="3">15</td><td rowspan="3">Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>13.03.26</td><td>13.03.26</td></tr>
<tr><td>PW2</td><td>26.03.26</td><td>26.03.26</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">26.03.26</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரி மீது சட்டப்பிரிவு 4(1) of TNOPPD Act-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து</td></tr>
</table>



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.01 10:33:11 +0530

| | | |
|---|---|---|
| | | எதிரிகளை 271(1) BNSS-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | No case property was seized and hence no property order passed. |

இவ்வழக்கானது இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தும், குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலினையிலிருந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

**அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்** :-

1. கடந்த 30.03.2021 ந் தேதி 09.30 மணிக்கு குடவாசல் காவல் சரகம் நானச்சேரி பஸ் ஸ்டாண்ட் அரசுக்கு சொந்தமான இடத்தில் எவ்வித அனுமதி பெறாமலும் இடைத்தேர்தல் நடத்தும் விதிமுறைகள் நடைமுறைகளில் இருக்கும் போது எவ்வித அனுமதியோ உரிமமோ இல்லாமல் திமுக கட்சியின் கொடி கட்டப்பட்டிருந்தது இவ்வழக்கின் தலைமறைவான எதிரி திமுக கட்சி கொடிகட்டி குற்றம் புரிந்துள்ளதாக இவ்வழக்கின் விசாரணை அதிகாரியால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் மேற்படி குற்ற இறுதி அறிக்கையும், மற்ற ஆவணங்களையும் பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.01 10:33:15 +0530

அனுப்பப்பட்டது.

3. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை அதனுடன் இணைந்த ஆவணங்களை பரிசீலினை செய்தபோது, எதிரி மீதான குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரி மீது சட்டப்பிரிவு 4(1) TNOPPD Act-ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் தன் மீதான குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார். அதன் பின்னர் அரசுத்தரப்பில் சாட்சியமளிக்க உத்தரவிடப்பட்டது.

5. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. <u>இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு</u> :-

(i) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.1, திரு. மனோகரன், அவரது சாட்சியத்தில், தான் தற்போது அரிதுவாரமங்கலம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன் என்றும், கடந்த 30.03.2021ம் தேதி காலை 09.30 மணியளவில் குடவாசல் காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது நானும் காவல் ஆய்வாளர் திருமதி. ரேகாராணி மற்றும் காவலர் திரு.கதிரவன் ஆகியோர்களுடன் குடவாசல் காவல் சரகத்திற்கு உட்பட்ட நாணச்சேரி பேருந்துநிலையம் அருகே கண்காணித்து ரோந்து செய்து வந்த போது எதிரி மஞ்சுளா



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.01 10:33:20 +0530

என்பவரால் எவ்வித அனுமதியும் இல்லாமல் தேர்தல் நடைமுறை விதிகள் அமலில் இருந்த நிலையில் அதை மீறி சட்டத்திற்கு புறம்பாக தி.மு.க கட்சிக் கொடியை கட்டி பொது இடத்தின் அழகை சீர்குலைக்கும் வகையில் எவ்வித அரசு அனுமதியின்றி கட்டப்பட்டிருந்தது என்றும், தாங்கள் காவல் ஆய்வாளருடன் நிலையம் வந்து சம்மந்தப்பட்ட எதிரி மஞ்சுளா என்பவர் மீது குடவாசல் காவல் நிலைய குற்ற எண்.317/2021, சட்டப்பிரிவு 4(1) TNOPPD Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், அதற்கு தானும் கதிரவனும் உதவியாக இருந்தோம். காவலல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(ii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.2, திரு. திரு. ரவி, உதவி ஆய்வாளர் அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை மற்றும் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திருமதி.ரேகாராணி என்பவர் தற்போது வேறு மாவட்டத்தில் பணிபுரிந்து வருவதாலும் மேற்படி காவல் ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும், நீதி நலன் கருதி கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு நான் இவ்வழக்கு கோப்பு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 30.03.2021ந் தேதி அன்று காலை 08.30 மணியளவில் குடவாசல் காவல் நிலைய வட்ட ஆய்வாளர் திருமதி.ரேகாராணி ஆகியோருடன் காவலர்கள் திரு. கதிரவன் மற்றும் திரு. மனோகர்ன ஆகியோர்களுடன் குடவாசல் சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் ரோந்து பணியில் இருந்த போது நாணச்சேரி பஸ்ஸ்டாப் அருகே எவ்வித அரசு முன் அனுமதியுமின்றி திமுக கட்சியின் கொடி கட்டப்பட்டிருந்தது என்றும், அதை பற்றி மேற்படி காவல் ஆய்வாளர் விசாரித்த



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.01 10:33:24 +0530

போது நாணச்சேர் மெயின்ரோடு காசிராமன் மனைவி மஞ்சுளா என்று தெரிய வந்துள்ளது. அவர் தேர்தல் நடத்தை விதி அமுலில் இருக்க போது பொது இடத்தின் அழகை சீர் குலைக்கும் வகையில் எவ்வித அனுமதி பெறாமல் திமுக கட்சி கொடியை கட்டியதற்காக மேற்படி காவல் ஆய்வாளர் காவல் நிலையம் வந்து 09.30 மணியளவில் எதிரியின் மீது காவல் நிலையக் குற்ற எண் 317/2021 பிரிவு 4(1) TNOPPD Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், **(அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்றும், பின்னர் இந்த பட்டியல் சாட்சிகள் 1,2 ஆகியோர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், மேலும் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி தலைமறைவு ஆகிவிட்டார் என்றும், இத்துடன் அவரது புலன் விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவு 4(1) TNOPPD Act ன் கீழ் தண்டிக்க தக்க குற்றம் என கடந்த 30.03.2021 ஆம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு எதிரான சாட்சியம் பற்றி எதிரியிடம் பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் வினவ எதிரிகள் " பொய் சாட்சி " என்று மறுத்து விட்டனர். தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் "இல்லை" என்று கூறினார்.

8. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

9. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.01 10:33:28 +0530

என்பதேயாகும்.

10. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் அதிகபட்ச தண்டனை அளிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

11. இவ்வழக்கின் எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சிகளில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி அதனால் ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

<u>அரசு தரப்பு சாட்சியங்களை மதிப்பிடுதல்</u> :-

12. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களும், அ.சா.1 மற்றும் அ.சா.2-ன் சாட்சியத்தை பரிசீலிக்கும்போது, சம்பவ இடத்தில் எதிரிகள் பொது இடங்களில் எவ்வித அனுமதியும் இல்லாமல் தேர்தல் நடைமுறை விதிகள் அமலில் இருந்த நிலையில் அதை மீறி சட்டத்திற்கு புறம்பாக திமுக கட்சியின் கொடியை கட்டி பொது இடங்களில் அழகினை கெடுக்கின்ற வகையில் வைக்கப்பட்டது என்றும், பின்பு சாட்சிகள் மனோகரன், ரவி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்பட்டது என்றும் கூறி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

13. அரசு தரப்பில் எதிரிகள் அரசின் அனுமதி இல்லாமல் பொது இடங்களின் அழகினை கெடுக்கும் விதமாக தேர்ததல் விதிமுறை அமலில் இருந்த போது திமுக கட்சியின் கொடி கட்டி வைக்கப்பட்டிருந்ததற்கு ஆதரவாக தனி நபர் சாட்சிகள் யாரும் இவ்வழக்கில்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.01 10:33:32 +0530

விசாரணை செய்யப்படவில்லை. மேலும் இவ்வழக்கில் எதிரி தான் மேற்படி கொடியை கட்டி வைத்திருந்தார் என்பதை உறுதி செய்ய திமுக கொடியை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளார். இத்தகைய சூழ்நிலையில் குற்றத்தை உறுதிப்படுத்வதற்காக தனிப்பட்ட சாட்சிகள் அவசியமாக கொண்டுவரப்பட வேண்டும். ஆனால், இவ்வழக்கில் எவ்வித தனிப்பட்ட சாட்சிகளும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

14. இவ்வழக்கில் சாட்சியம் அளித்த அனைவரும் காவல் அதிகாரிகளே ஆவார். இவர்களின் சாட்சியத்தை வெறும் அதிகார பூர்வமான சாட்சிகளாக இருப்பதற்காகவே தள்ளுபடி செய்ய முடியாது என்றாலும், தனிப்பட்ட சாட்சிகள் எளிதில் கிடைக்கும் பட்சத்தில் எந்த பொது சாட்சியமும் கொண்டு வரப்படாத நிலையில் இவர்களின் சாட்சியம் நம்பகத்தன்மை அற்றதாக மாறுகிறது.

15. சம்பவ இடம் மக்கள் அதிகம் நடமாடும் இடமாக இருந்தாலும், எதிரியை அடையாளப்படுத்த தனிநபர் சாட்சியம் யாரும் இவ்வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்பதிலிருந்தும், சம்பவயிடம் குறித்து பார்வை மகசரோ, மாதிரி வரைபடமோ இவ்வழக்கில் தயார் செய்யப்படவில்லை போன்ற குறைபாடுகள் அரசுத்தரப்பு வழக்கின் மீது மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தி அதை நம்பகத்தன்மையற்றதாக செய்கிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, அதனால் ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வது உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.01 10:33:36 +0530

16. எனவே, இவ்வழக்கில் எதிரி மீது சட்டப்பிரிவு 4(1) TNOPPD Act-ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**உத்தரவு**

17. முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 4(1) TNOPPD Act-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து எதிரியை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

18. எதிரி எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் ஏதும் தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் அதனை பொறுத்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.01 10:33:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. மனோகரன், தலைமைக் காவலர் |
| அ.சா.2 | திரு. ரவி, காவல் உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 30.03.2021 | முதல் தகவல் அறிக்கை |

**எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:- இல்லை

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.01 10:33:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**வழக்கு சுருக்கம்**

<table>
<tr><td>1.</td><td>எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள்</td><td colspan="3">--</td></tr>
<tr><td>2.</td><td>குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">14.11.2025</td></tr>
<tr><td>3.</td><td>குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள்</td><td colspan="3">06.01.2026</td></tr>
<tr><td>4.</td><td>தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம்</td><td colspan="3">-</td></tr>
<tr><td rowspan="3">5.</td><td rowspan="3">சாட்சிகள் விசாரணை</td><td>Witness</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>PW-1 :</td><td>13.03.26</td><td>13.03.26</td></tr>
<tr><td>PW-2 :</td><td>26.03.26</td><td>26.03.26</td></tr>
<tr><td>6.</td><td>BNSS பிரிவு 351-ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி</td><td colspan="3">26.03.2026</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | கேட்கப்பட்ட நாள் | |
| 7. | எதிரி தலைமறைவு காலம் பற்றிய விபரம் | இல்லை. |
| 8. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள் | இல்லை. |

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.04.01 10:33:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.